பெருநகர சென்னை மாநகராட்சி

செ.வெ.எண்.159 நாள் : 30.11.2016

# பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழக அரசின் உத்தரவின்படி, வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள ஒவ்வொரு மண்டலத்திற்கும் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்களாக இந்திய ஆட்சிப் பணியாளர் நிலையில் உள்ள அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் சம்பந்தப்பட்ட மண்டலங்களில் ஆய்வுகள் மேற்கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மழைநீர் தேங்கும் இடங்களாக கண்டறியப்பட்ட 35 இடங்களில் தற்போது 10 இடங்களில் படகுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து நெரிசல் ஏற்படும் இடங்களைக் கண்டறிந்து சீரான தடையில்லா போக்குவரத்தினை உறுதிசெய்யும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்படும் 16 சுரங்கப்பாதைகள் மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பில் உள்ள 6 சுரங்கப்பாதைகளில் உயர்அழுத்த மின்மோட்டார்கள் மற்றும் சூப்பர் சக்கர் வாகனங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு குழு வீதம் மீட்புப் பணிகளில் ஈடுபட மீட்புக் குழுவினர் தயார்நிலையில் உள்ளனர். இரவு நேரங்களில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள 18 உயர் மின்கோபுர விளக்குகள் தயார்நிலையில் உள்ளது.

பெருமழை பெய்து வீட்டிற்குள்ளும், குடியிருப்பு பகுதிகளிலும் வரும் பாம்புகளை பிடிப்பதற்காக ஒரு குழுவிற்கு 5 நபர்கள் வீதம் 9 குழுக்கள் தயார்நிலையில் உள்ளனர். மின்சார வாரியத்தின் மூலம் மழைக்காலங்களில் மின்தடை மற்றும் மின்கசிவு ஏற்படாத வகையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீட்புப் பணிகளில் ஈடுபட 108 மோட்டார் பொருத்தப்பட்ட படகுகளும், பொதுமக்களை தங்கவைப்பதற்காக 176 நிவாரண முகாம்களும், உணவு தயாரிப்பதற்காக 4 பொது சமையல் கூடங்களும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், மழைக்காலங்களில் சாலையில் விழும் மரங்களை அப்புறப்படுத்துவதற்காக 24 மணிநேரமும் செயல்படும் வண்ணம் இரண்டு வாகனத்துடன் 45 மர அறுவை இயந்திரங்களும், மழைக்காலங்களில் தொற்றுநோய்கள் பரவாமல் தடுத்திடவும், கொசுக்களை கட்டுப்படுத்திடவும் 3337 மலேரியா தொழிலாளர்களுடன், 420 அழுத்த தெளிப்பான்கள், 245 கையினால் இயக்கும் புகையடிக்கும் கருவிகள் மற்றும் 41 வாகன புகையடிக்கும் கருவிகளும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறையின் மூலம் அடையாறு, கூவம் மற்றும் எண்ணூர் ஆகிய கால்வாய்களும், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள மழைநீர் வடிகால்வாய்களும் தூர்வாரப்பட்டு மழைநீர் எளிதில் கடந்து செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குளோரின் கலந்த குடிநீர் வழங்கிடவும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மூலம் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் மேற்கொள்ள தயார்நிலையில் உள்ளனர். மீட்புப் பணிக்கு தேவையான ஜே.சி.பி., புல்டோசர், கிரேன், ஜெனரேட்டர் மற்றும் அதற்கு தேவையான டீசலும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

தேசிய பேரிடர் மீட்பு குழுவைச் சேர்ந்த 40 நபர்களுடன் 4 மிதவை மீட்பு படகுகள் அரக்கோணத்திலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வரவழைக்கப்பட்டு தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசால் வடகிழக்கு பருவமழை புயல் அறிவிப்பின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பள்ளிகளுக்கு நாளை மற்றும் நாளை மறுநாள் (01.12.2016 மற்றும் 02.12.2016) ஆகிய இரண்டு நாட்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்கள் புகார்களை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் அமைக்கப்பட்டுள்ள 24 மணிநேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறையில் உள்ள 044–25619206, 25619511, 25384965, 25383694, 25367823, 25387570 என்ற தொலைபேசி எண்களிலும், 9445477207, 9445477203, 9445477206, 9445477201, 9445477205 ஆகிய வாட்ச் அப் (Whatsapp) எண்களிலும், gccdm1@chennaicorporatio.gov.in, gccdm2@chennaicorporatio.gov.in, gccdm3@chennaicorporatio.gov.in, gccdm4@chennaicorporatio.gov.in, gccdm5@chennaicorporatio.gov.in, ஆகிய மின்னஞ்சல் வழியாகவும் புகாரினை பதிவு செய்யலாம். பெறப்படும் புகாரினை சம்பந்தப்பட்ட மண்டலங்களுக்கு அனுப்பி உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கட்டுப்பாட்டு அறையில் வைக்கப்பட்டுள்ள தொலைக்காட்சியின் வாயிலாக கண்டறியப்படும் புகார்களின் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீட்புப்பணி குறித்த தகவல்களை உடனுக்குடன் அனைத்து அலுவலர்களுக்கும் தெரிவிக்க வயர்லெஸ் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது உருவாகியுள்ள “நாடா” புயலை எதிர்கொள்ள தமிழக அரசின் உத்தரவின்படி, எவ்வித சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. ஆகையால், பொதுமக்கள் எவ்வித அச்சமோ, பயப்படவோ தேவையில்லை என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**